புரட்சிப்
பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • அக்டோபர் (OCTOBER) 22, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 43 • விலை(PRICE) ரூ.6.00

சடலங்களைச் சுமக்கும் கழக மகளிர் அணியின் சமூகப் புரட்சி!

‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேட்டின் படப்பிடிப்பு

சேலம், ஈரோடு, திருப்பூர், தர்மபுரி மாவட்டங்களில் திராவிடர் விடுதலைக் கழக மகளிர் அணியினர் ஆணாதிக்கம், ஜாதித் தடைகளைத் தகர்த்து சடலங்களை இடுகாடு வரை சுமந்து சென்று இறுதி நிகழ்வுகள் நடத்துவதை ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ நாளேடு (அக.16, 2026) கட்டுரையில் படம்பிடித்துக் காட்டியுள்ளது. கட்டுரையின் தமிழாக்கம்:

“மக்கள் சாபமிடுகிறார்கள்; ஆனால், இறுதிச் சடங்குகளை நடத்துவதன் மூலம் ஆணாதிக்கம் இழைத்த அநீதிகளைச் சரிசெய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.” சேலத்தில், இந்தப் பெண்கள் இறந்தவர்களை அடக்கம் செய்கிறார்கள். ஆனால், அதற்காக அவர்கள் ஒரு விலையைக் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆர்.சரஸ்வதி முதன்முதலில் ஒரு சடலத்தைத் தனது கைகளால் சுமந்து மயானம் வரை எடுத்துச் சென்றபோது, அவரது உறவினர்கள் அவரைக் கண்டித்தனர். கிராம மக்களும், “நீ ஏன் இதைச் செய்கிறாய்?” என்று கேள்வி எழுப்பினர். “இதைச் செய்ய ஆண்களுக்கு மட்டும்தான் அனுமதி இருக்கிறதா?” என்று நான் அவர்களிடம் கேட்டேன் என்கிறார் சரஸ்வதி. இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு காலத்தில் அவரைக் கேள்வி கேட்டவர்களே, தங்களது அன்புக்குரியவர்களின் இறுதிச் சடங்குகளை நடத்த அவருடன் இணைந்திருக்கிறார்கள்.

50 வயதான சரஸ்வதி, சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சமூகநீதி அமைப்பான திராவிடர் விடுதலைக் கழகத்தின் (DVK) மகளிர் அணியைச் சேர்ந்தவர். இறப்புச் சடங்குகளை ஆண்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்ற ஆணாதிக்க மரபுகளை எதிர்ப்பதற்காகவும், சம உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், மரணத்தைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள ஜாதி அடிப்படையிலான நடைமுறைகளையும் மத மூடநம்பிக்கைகளையும் தகர்ப்பதற்காகவும் திராவிடர் விடுதலைக் கழகம் இறுதி நிகழ்வுகளை நடத்துகிறது. பெரியார் ஈ.வெ.ராமசாமியின் பகுத்தறிவுக் கொள்கைகளை உள்வாங்கியிருக்கிறது இந்த இயக்கம். பாலினம், ஜாதி, மதம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து, இறந்தவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துவதில் பெண்களுக்கும் சமமான பங்கு இருக்க வேண்டும் என்பதே அவரின் கொள்கை.

“ஆண்களுக்கு இருக்கும் அதே உரிமைகள் பெண்களுக்கும் உண்டு என்று பெரியார் நம்பினார்” என்கிறார் சரஸ்வதி. “1980-ஆம் ஆண்டிலேயே திராவிடர் கழகம் இதுபோன்ற இயக்கத்தைத் திருச்சியில் தொடங்கியது. அங்கு பெண்கள் இறுதி நிகழ்வுகளுக்குத் தலைமை ஏற்றனர். 2010-ஆம் ஆண்டு சேலத்தில் இந்த முன்னெடுப்பைத் திராவிடர் விடுதலைக் கழகம் வழியாகத் தொடங்கினோம். பின்னர் இதை மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு சென்றோம்.”

சேலத்தில் மட்டும் இந்த மகளிர் அணியில் 300-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். ஈரோடு, திருப்பூர், தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் பலர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் சிலர் குடும்பக் காப்பாளர்கள்; மற்றவர்கள் அரசு ஊழியர்கள், தையல் தொழிலாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் ஆசிரியர்கள்.

“கிராமங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தங்களது நேரத்தை ஒதுக்கி இவர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களின் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களால் மேலும் மேலும் இளம் பெண்கள் இணைந்து வருகிறார்கள்” என்கிறார் சரஸ்வதி. ஒரு குடும்பத்துக்கு உதவி தேவைப்படும்போது, மகளிர் அணியினர் அந்த வீட்டுக்குச் செல்கிறார்கள். கருப்புப் புடவைகளை அணிந்துகொண்டு, இறந்தவரின் உடலை மயானம் அல்லது இடுகாடு வரை சுமந்து செல்கிறார்கள். இறுதிவணக்கம் போன்ற மரியாதை முழக்கங்களை எழுப்புகிறார்கள். உடலைக் குழிக்குள் இறக்கி, அதன் மீது மண்ணையும் அவர்களே போடுகிறார்கள்.

“நாங்கள் எந்தவிதமான மூடநம்பிக்கைகளையும் மதச் சடங்குகளையும் பின்பற்றுவதில்லை” என்கிறார் சரஸ்வதி. “மலர்கள், விளக்குகள், கற்பூரம், சாண வரட்டிகளை எரித்தல், இறந்தவரின் நெற்றியில் நாணயங்களை வைப்பது, கடவுள்களின் படங்களை வைப்பது போன்ற எதுவும் எங்களிடம் கிடையாது.”

இது வெறுமனே இறுதிச் சடங்குகளைச் செய்வது மட்டுமல்ல என்கிறார் அவர். இறப்புச் சடங்குகளில் பெண்கள் பங்கேற்பதைக் கட்டுப்படுத்தும் மரபுகளுக்கு எதிரான போராட்டமாகவும் இது அமைகிறது. ஆனால், இந்தப் பணிக்காக அவர்கள் பெரும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியுள்ளது சேலம் மகளிர் அணியின் தலைவரான ஓ.சுதா கூறுகையில், இந்தப் பணியில் ஈடுபடுவதால் தனது தந்தை பல ஆண்டுகளாகத் தன்னுடன் பேசுவதில்லை என்கிறார். மதப்பற்றுள்ள அவர், சுதா செய்யும் பணியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

“சில நேரங்களில் அவர் என் குழந்தைகளிடம் பேசுவார். ஆனால், என்னிடம் ஒருபோதும் பேசுவதில்லை” என்கிறார் சுதா. “ஆனால், நான் செய்யும் பணியில் ஓர் அர்த்தத்தைக் காண்கிறேன். அதனால் தொடர்ந்து செயல்படுகிறேன்; அதுவும் துணிச்சலுடன் செயல்படுகிறேன்.”

ஈரோடு மாவட்டம் சென்னிமலையைச் சேர்ந்த ஆர்.ஜோதிமணி, இறந்தவரின் உடலைச் சுமந்து செல்வதற்காகத் தன்னைப் பலர் சபிப்பதாகக் கூறுகிறார். “இந்தக் கருப்புச் சட்டைக்காரர்களுக்கு (பெரியாரியவாதிகளுக்கு) வேறு வேலையே இல்லை என்று சொல்வார்கள்” என்கிறார் 41 வயதான ஜோதிமணி. “நான் ஒருபோதும் கோபப்படுவதில்லை. நாங்கள் எதைச் சாதிக்க முயற்சிக்கிறோம் என்பதை அவர்களுக்கு விளக்க முயற்சி செய்வேன். இறுதியில் சிலராவது எங்களது நோக்கத்தைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்வார்கள்.”

தங்களுடன் செயல்படும் பெண் செயற்பாட்டாளர் ஒருவரின் தந்தையை எரியூட்டியபோது, சில கிராம மக்கள் அவரது தலை வெடித்துவிடும் என்றும், அந்த இறுதி எரியூட்டலில் ஈடுபட்ட பெண்களுக்குப் பெரும் தீங்கு நேரிடும் என்றும் கூறியதாகச் சுதா தெரிவிக்கிறார். “ஆனால், நாங்கள் எரியும் சிதையின் அருகே நின்று, அந்த நிகழ்வு முழுமையாக நடைபெறுவதை உறுதி செய்தோம்” என்கிறார் சரஸ்வதி. இறுதிச் சடங்குகளின்போது பெண்கள் மயானத்துக்குச் செல்லக்கூடாது என்ற மரபு பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருவதாகச் சுதா கூறுகிறார். “இறுதிச் சிதைக்குத் தீ மூட்டுவதும், இறுதிச் சடங்குகளைச் செய்வதும் மகன்களின் பொறுப்பாகக் கருதப்படுகின்றன. பெண்கள் இவற்றைச் செய்தால், இறந்தவர்கள் முக்தி அடைய மாட்டார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள். இந்த மூடநம்பிக்கைகளை உடைக்கவே நாங்கள் விரும்புகிறோம்” என்கிறார் அவர்.

திருப்பூரைச் சேர்ந்த வி.சிவகாமி தனது கிராமத்தில் மகளிர் அணி செய்து வரும் பணிகளைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார். பெரியாரின் கொள்கைகளை அவர் மதித்தபோதிலும், இந்த முன்னெடுப்பில் தானும் இணைவேன் என்று

தொடர்ச்சி 2-ம் பக்கத்தில்

சுடுகாடு செல்ல பெண்களை ஏன் அனுமதிக்கவில்லை?

பெண்கள் சுடுகாடு வரை செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதற்குப் பல்வேறு சமூக வரலாற்றுக் காரணங்கள் உண்டு. ‘தீட்டு’ என்ற பார்ப்பனிய கருத்தியல் ஒரு காரணம். பெண்ணின் இயற்கையான மாதவிடாயைத் தீட்டு என்று கூறி வீடு, கோயில், குடும்ப நிகழ்வுகளில் ஒதுக்கி வைத்தனர். இந்த தீண்டாமை சுடுகாடு வரை நீண்டது!

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் மாதவிடாயைக் காரணமாகக் கூறி அனுமதி மறுத்தார்கள்; பெண்கள் சபரிமலை கோயிலுக்குள் நுழைய அனுமதித்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு இதைத் ‘தீண்டாமை’ என்றே கூறியது.

இரண்டாவது காரணம் சொத்துரிமை. இந்து தர்மமும் சட்டங்களும் பெண்களுக்குச் சொத்துரிமையை மறுத்தது; பிறகு சட்டம் திருத்தப்பட்டது. இந்தியாவிலேயே இதற்கு வழிகாட்டியது கலைஞர் தலைமையில் நடந்த திமுக ஆட்சி! சடலத்துக்கு கொள்ளி வைக்கும் சடங்கு ஆண்களுக்கு மட்டுமே இருந்தது. இதன் வழியாக சொத்துக்கு வாரிசு உறுதி செய்யப்பட்டது. பெண்களை சுடுகாடு வரை அனுமதித்தால் கொள்ளி வைத்து சொத்துரிமை கேட்கக்கூடும் என்ற அச்சத்தால் சுடுகாட்டுக்கு பெண்களை அனுமதிக்கவில்லை.

மூன்றாவதாக, பெண்கள் பலவீனமானவர்கள் என்று ஆணாதிக்க சமூகமும் பார்ப்பனிய சாஸ்திரங்களும் சுமத்திய அடையாளம். சுடுகாடு அச்சத்தை உருவாக்கிவிடும் என்ற ஒரு காரணம்.

நான்காவதாக, கணவன் இறந்தால் மனைவியையும் எரிக்கும் உடன்கட்டை ஏறும் இந்து மதக் கொடுமை சட்டத்தால் தடுக்கப்பட்ட பிறகு பெண்கள் சுடுகாடு வரை போவது தடுக்கப்பட்டது.

ஐந்தாவதாக, கணவன் இறந்த உடனே பெண்களுக்கு மொட்டையடித்து, வீட்டுக்குள் அடைத்ததோடு பெண் அழுவதை அபசகுணம் என்ற பார்ப்பனியக் கருத்தியல். வேதகாலத்திலோ வேதங்களிலோ கூட குழந்தைத் திருமணமும் உடன்கட்டை ஏறும் கொடூரமும் இடம்பெறவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பார்ப்பனர்கள் வேதத்தையே மோசடியாகத் திருத்தி இருக்கிறார்கள்.

"பெண்ணே எழு, இறந்துவிட்ட ஒருவருடன் ஏன் படுத்துக்கிடக்கிறாய்? உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உலகிற்கு வந்து, உன்னை மணந்து கொள்ள விரும்பி உன்னுடைய கரம் பற்றும் ஒரு ஆண்மகனின் மனைவியாக இரு" (ரிக்வேதம் X - 18 -8) கொடிய உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நியாயப்படுத்த புரோகிதர்கள் ரிக்வேதத்தையே திருத்தி எழுதவும் தயங்கவில்லை. ரிக்வேதத்தில் (X-18-7) பெண்கள் ஊர்வலமாக மயானத்திற்குச் செல்வதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. "விதவையாகிவிட்டதனால் எந்தத் துயரமும் இந்தப் பெண்களுக்கு வராமலிருக்கட்டும்." இந்தச் சூத்திரத்தில் அக்ரே என்ற ஒரு வார்த்தை இருந்தது. வங்காளத்துப் புரோகிதர்கள் அதை அக்னே என்று திருத்தி உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்கான பிரமாணமாக மாற்றிவிட்டனர். பார்ப்பன புரோகிதர்கள் என்னென்ன நீசச் செயல்கள் புரிவார்கள் என்பதற்கு ஒரு சான்றாகும். இதோ இங்கு ஒரு சிறு வார்த்தையைப் புரட்டி, பொருளையே மாற்றித் தவறாகப் பயன்படுத்தி, ஆயிரமாயிரம் பெண்களின் உயிர்ப்பலிக்குக் காரணமாக்கிவிட்டனர்." என்று சமஸ்கிருதம் கற்றுத் தேர்ந்த ஜெர்மானியர் மாக்ஸ் முல்லர் (Max Muller) கூறுகிறார். இவர் பார்ப்பனர்களால் கொண்டாடப்படுபவர்.

த.வெ.க மதவாத ஆட்சி நடத்துகிறதா?

"த.வெ.க ஆட்சி மதச்சார்பின்மையைக் குழிதோண்டிப் புதைக்கும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கிறது. அதாவது ஆயுத பூஜை கொண்டாட்டத்திற்காக அரசு ஊழியர்கள், அரசு நிறுவனங்கள் பொதுமக்களிடம் நன்கொடை திரட்டக் கூடாது என்று ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அத்துடன் நிறுத்திக்கொள்ளாது ஆயுத பூஜையைக் கொண்டாட வேண்டும் என்றும், அதை எப்படிக் கொண்டாட வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கை வலியுறுத்துவது வெட்கக்கேடானது! கடந்த அக்.10 அன்று வெளியிட்ட சுற்றறிக்கை இவ்வாறு கூறுகிறது.

"அரசு அலுவலகங்களில் ஆயுதபூஜை எளிமையாகக் கொண்டாடப்பட வேண்டும். பூசணிக்காய், தேங்காய் உடைத்து சாமி படங்களுக்கு பூ வைத்து அலுவலக வளாகத்தை அலங்கரித்து எளிமையாக நடத்தலாம்" என்று கூறுகிறது. மதச்சார்பின்மைக்கும் ஏற்கனவே தமிழகத்தில் அமுலில் உள்ள அரசாணைகளுக்கும் எதிரானது இந்த சுற்றறிக்கை. அத்துடன் தலைமைச் செயலகத்தில் தடபுடலாக பூஜைகளும் நடந்துள்ளன.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் 1968 ஏப்ரல் 29ஆம் தேதி பிறப்பித்த அரசாணை அரசு அலுவலகங்களில் உள்ள ஆண், பெண் கடவுள் படங்களையும் ஏனைய மதம் சார்ந்த அடையாளங்களையும் படிப்படியாக அகற்ற வேண்டும் என்று கூறுகிறது. ஒன்றிய ஆட்சியும் 1994 மே-4ம் தேதி இதேபோன்ற ஒரு அரசாணையை மாநில அரசுகளுக்கு அனுப்பியது. அரசு மற்றும் அரசுசார் அலுவலகங்களில் எந்த மதம் சார்ந்த கோயில், சர்ச் மற்றும் மசூதி வழிபாடுகளை அனுமதிக்கக் கூடாது என்று மாநில அரசுகளுக்கு அனுப்பிய அந்த அரசாணை கூறியது. தொடர்ந்து 2005ஆம் ஆண்டு மே-28ஆம் தேதி தமிழ்நாட்டின் காவல் துறை இயக்குனர் லத்திகா சரண் காவல் நிலையத்திலோ, காவலர் குடியிருப்பிலோ, காவல் துறை வளாகத்திலோ எந்த மதச் சின்னத்துக்கும் வழிபாடுகளுக்கும் அனுமதி இல்லை என்று சுற்றறிக்கை அனுப்பினார். மீண்டும் 2013ஆம் ஆண்டு மார்ச்-13 அன்று தமிழ்நாடு காவல்துறை இயக்குனர் ராமானுஜம் இதேபோன்ற ஒரு சுற்றறிக்கையை காவல்துறை அதிகாரிகளுக்கு அனுப்பினார்.

இந்த அரசாணைகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அரசு மற்றும் அரசுசார் நிறுவனங்களை இந்துமயமாக்கும் முயற்சிகளில் இந்த மாநில ஆட்சி துடித்துக் கொண்டிருக்கிறது.

திருப்பதி ஏழுமலையான் காலடியில் விவசாயத் துறைக்கான நிதிநிலை அறிக்கையை முன்கூட்டியே விவசாய அமைச்சர் சமர்ப்பிக்கிறார். நிதியமைச்சர் சிலுவையைப் பிடித்துக் கொண்டு நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறார். பாஜக ஆளும் மாநிலங்களில் கூட இத்தகைய கூத்துகள் நடப்பதில்லை.

பெரியாரைக் கொள்கைத் தலைவராக கூறிக்கொண்டு அரசு நடவடிக்கைகளுக்கும் அரசு அமைப்புகளுக்கும் காவி அடிக்கும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறது இந்த ஆட்சி. அரசு அலுவலகங்கள் மதச்சார்பின்மையின் அடையாளங்கள். தமிழ்நாடு அரசின் இந்தச் செயல்பாடுகள் வன்மையான கண்டனத்துக்குரியவை.

துர்கா பூஜைக்கு வந்த 19 பக்தர்களின் உயிரிழப்புக்கு யார் காரணம்?

கல்கத்தா துர்கா பூஜை கொண்டாட்டத்தில் 19 பக்தர்கள் உயிரிழந்துவிட்டார்கள். ம.பி. மாநிலம் குவாலியரில் 'சீதா மாதா' கோயிலுக்குச் சென்ற பக்தர்கள் கூட்டத்தில் டிரக் மோதி 15 பக்தர்கள் இறந்துவிட்டார்கள். கடந்த இரண்டு நாட்களில் மட்டுமே வந்த செய்திகள் இவை.

கடவுள் சக்தியை நெஞ்சில் சுமந்து தரிசனத்துக்கு வரும் பக்தர்களை கடவுள் காப்பாற்ற வேண்டாமா? கடவுளுக்கு சக்தி என்று ஒன்று இருந்தால் கடவுள் காப்பாற்றியிருக்க மாட்டாரா? என்ற பகுத்தறிவாளர்களின் கேள்விக்குப் பதில் கூறமாட்டார்கள். இந்து மதத்தைப் புண்படுத்துவதாகக் கூறி நீதிமன்றங்களுக்கு ஓடுவார்கள்; பல நீதிபதிகளும் ஆமாம்..ஆமாம் என்று தீர்ப்பு எழுதுவார்கள்.

தொடர்வண்டி விபத்து, அரசு கட்டிய பாலம் இடிந்து விபத்து என்றால் உடனே அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவார்கள். ஆனால் பக்தர்களின் விபத்துக்கு கடவுள்களைக் குற்றம் சாட்டுவது இல்லை. இப்போது கல்கத்தாவில் நடந்த துர்கா பூஜை விபத்துக்குக் காரணம் அங்கே பதவிக்கு வந்திருக்கும் பாஜகவின் முதல்வர் சுவேந்து அதிகாரியும், அமித் ஷாவும்தான்.

மம்தா பானர்ஜி ஆட்சிக் காலத்தில் துர்கா பூஜைப் பந்தல்களை விட தனது ஆட்சியில் கூடுதலாக பந்தல்களைப் போடுவேன் என்று சவால் விட்டுக் களமிறங்கினார் முதலமைச்சர் சுவேந்த். அதனால் சிறு சிறு சந்துகளையும் விடாமல் 57,000 பந்தல்களைத் தனது கண்காணிப்பின் கீழ் போட்டார். உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் கல்கத்தாவுக்கு வந்து தங்கி தனது இந்துத்துவா சேவையை தீவிரப்படுத்தினார்.

குறுகிய சந்துகளில் எல்லாம் பந்தல்கள் போடப்பட்டன. உள்ளே நுழைவதற்கு குறுகலான பாதை. கிரிஷ்பார்க் பகுதியில் அமைக்கப்பட்ட பந்தலில் ஒரே நேரத்தில் கூட்டம் கூடி நெரிசலில் முச்சுத்திணறல் ஏற்பட்டு அவர்கள் வெளியே வர முடியாமல் 19 பக்தர்கள் உயிரிழந்துவிட்டார்கள். காவல்துறை ஒழுங்குபடுத்தவில்லை. கூட்டத்தையும் ஒழுங்கு செய்யும் ஏற்பாடுகளும் இல்லை. இதுவே இந்த மரணத்திற்குக் காரணம் என்று 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

இந்து மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத இந்துத்துவா ஆட்சியை நடத்துகிறார்கள். இதைச் சுட்டிகாட்டினால் இந்து விரோதி என்கிறார்கள். பக்தர்களைக் காப்பாற்ற கடவுளுக்கும் சக்தியில்லை; கடவுளின் காவலர்களாக ஆட்சி நடத்தும் இந்துத்துவாதிகளுக்கும் துப்பில்லை!

கோவையின் அடையாளமானது 'பெரியார் அறிவுலகம்'

திராவிட மாடல் ஆட்சியின் சாதனை

திராவிட மாடல் ஆட்சியில் மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கப்பட்ட "பெரியார் அறிவுலகத்தை" இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் திறந்து வைத்துள்ளார். பெரியார் பேசிய 'இனி வரும் உலகம்' கண்ணோட்டத்தில் அறிவியல் அரங்கமாக இது உருவாகியிருக்கிறது. இதுகுறித்து மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையின் சில பகுதிகள்:

2024-2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், கோவைவாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரின் அறிவுத்தாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம் அமைக்கப்படும் என அறிவித்தோம். அதனையடுத்து, 2024 நவம்பர்-6ம் தேதி அடிக்கல் நாட்டி, கோவை மத்தியச் சிறைச்சாலைக்குச் சொந்தமான இடத்தில், 1.98 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதனைக் கட்டி முடித்தோம். இப்படி நாம் விரைந்து செயல்பட்டு, அக்கறையோடு உருவாக்கியுள்ள அறிவுக் கோயில்தான் பெரியார் அறிவுலகம்.

தரைத்தளத்தில் கலையரங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் விண்வெளிப் பயணத் தூக்கி, முதல் தளத்தில் வரவேற்பறை, அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் சொந்தப் புத்தகம் படிக்கும் பிரிவு, மூன்றாம் தளத்தில் போட்டித் தேர்வுகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம், நான்காம் தளத்தில் தமிழ்ப் புத்தகப் பிரிவு மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, ஐந்து, ஆறாவது தளங்களில் ஆங்கிலப் புத்தகப் பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஏழாம் தளத்தில் அறிவியல் மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் எனக் காண்போரின் கண்களைக் கவரும் விதத்திலும் சிந்தையைத் தூண்டும் விதத்திலும் உலகத் தரத்தில் இதனை அமைத்துள்ளோம்.

ஒரு 1,25,000 நூல்களைக் கொண்ட, மேற்கு மண்டலத்துக்கான மாபெரும் அறிவுச் சுரங்கமாக இது திகழவுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான பிரெய்லி (Braille) புத்தகங்கள் மற்றும் சக்கர நாற்காலி (Wheelchair) போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் முதல் ஆராய்ச்சியாளர்கள் வரை பலரும் பயன்பெறும் வகையில் பெரியார் அறிவுலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நான் கோவைக்குச் சென்றிருந்தபோதே, பெரும்பாலான பணிகள் முடிவுற்றிருந்தன. அப்போதே இதனைத் திறந்து வைத்திடலாம் எனப் பலரும் சொன்னபோது, "அவசரம் வேண்டாம், முழுமையாகப் பணிகள் நிறைவடைந்த பின்னர் திறந்தால் போதுமானது" என்று சொன்னேன். யார் திறந்தால் என்ன! திறந்து வைப்பதா பெருமை? எதையும் திட்டமிட்டு உருவாக்குவதுதானே உண்மையான பெருமை! தமிழ்நாட்டில் அந்தப் பெருமை ஆக்க சக்தியான திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உரியது" என்று கூறியுள்ளார்.

இந்தப் பெரியார் அறிவுலகத்தை வடிவமைத்தவர் சென்னையைச் சேர்ந்த பிரபல கட்டடக் கலை நிபுணர் டாக்டர் பொன்னி முகுந்தன் ஆஸ்கர். திருச்சியில் உள்ள தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் இளங்கலை கட்டடப் பொறியியல் படிப்பை முடித்த முதல் பெண் மாணவி. ஏப்ரல் 2023-ல் திறக்கப்பட்ட தெலங்கானா மாநிலத் தலைமைச் செயலகத்தை வடிவமைத்த பெண் என்ற பெருமையைப் பெற்றவர்.

கோவையிருந்து கொளத்தூர்வரை!

'விஜயதசமி' வாழ்த்தில்

கையெழுத்திட்ட கரங்களால் -தான்

திறக்கப்படுவதைக் கண்டுகொள்ளாமல்

உயரத்தில் நின்ற அறிவுலகம்

தன் உருப்பெருக்கி வழியே

உற்றுப் பார்த்தது

கோயம்புத்தூரிலிருந்து கொளத்தூரை!

– தலித் முரசு

முதல் பக்க தொடர்ச்சி..

ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால், ஒரு நாள் எனது தோழி, கிராம மக்களின் எதிர்ப்பை எதிர்கொண்டு தனது கணவரின் சிதைக்குத் தீ மூட்டியதைப் பார்த்தேன். அவரது உறவினர்கள் அவரைச் சபித்தார்கள். ஒரு ஆண்தான் சிதைக்குத் தீ மூட்ட வேண்டும் என்று கூறினார்கள். நீண்ட நேரம் போராட்டம் தொடர்ந்தது. ஆனாலும், என் தோழி தனது முடிவில் உறுதியாக நின்றார்.

"அந்த நிகழ்வுதான், இதேபோன்ற சூழ்நிலைகளில் இருக்கும் மற்ற குடும்பங்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்தியது" என்கிறார் சிவகாமி. அவர்கள் எதிர்த்துப் போராடுவது ஆணாதிக்கத்தை மட்டும் அல்ல. "ஜாதியின் அடிப்படையிலான சடங்குகளையும் மக்கள் கைவிட வேண்டும் என்று விரும்புகிறோம். உதாரணமாக, ஒருவரது ஜாதியைப் பொறுத்து, வீட்டில் இறந்தவரின் உடலை எந்தத் திசையில் வைக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் ஒரு சடங்கு உள்ளது. "நாங்கள் கிராமத்தில் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களின் இறுதிச் சடங்குகளை நடத்துகிறோம். இறந்தவரின் குடும்பத்தினரின் விருப்பத்துக்கு ஏற்ப உடலைப் புதைக்கவோ எரியூட்டவோ செய்கிறோம்" என்கிறார் ஜோதிமணி. "ஒரு வீட்டுக்குள் நாங்கள் நுழையும்போது, அங்கு வசிப்பவர்களின் ஜாதியையோ மதத்தையோ ஒருபோதும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை."

மேலும், மகளிர் அணி பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றையும் அணுகி விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்வதாகவும், நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள சமூகக் கூடங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் உரையாடல் நிகழ்ச்சிகளை நடத்துவதாகவும் சுதா கூறுகிறார்.

எம்.ஆர்.ராதா நாடகத்தில் ‘சம்பூக வதைக்’ காட்சி

நவராத்திரி இறுதி நாளில் தீமையின் உருவம் என்று கூறி அசுரர்களான திராவிட மாவீரர்கள் ராவணன், மேகநாதன் கும்பகர்ணன் உருவங்களை எரிக்கிறார்கள். பார்ப்பன தர்மத்தை காப்பாற்றியதே ராம ராஜ்யம். அந்த ஆட்சி நன்மையின் உருவமாம்!

நடிகவேள் எம்.ஆர்.ராதா நடத்திய ராமாயணம் நாடகத்தில் பார்ப்பன தர்மத்தை காப்பாற்ற சூத்திர 'சம்புகனை' கொலை செய்யும் காட்சியின் உரையாடல்களை இங்கு வெளியிடுகிறோம். நாடகத்திற்கு வசனம் எழுதியவர் சுயமரியாதைச் சுடரொளி திருவாரூர் தங்கராசு.

காட்சி –24

இடம்: ராமன் தர்பார்.பாத்திரங்கள்: ராமன், லட்சமணன், பரதன், சத்ருக்கனன், வசிஷ்டர், அமைச்சர், பிரதானிகள் மற்றும் பலர்.

(திடீரென்று பெருங் கூச்சலுடன் ஏழெட்டுப் பார்ப்பனர்கள் ஓர் அய்ந்து வயது பார்ப்பனச் சிறுவனது பிணத்துடன் உள்ளே நுழைகிறார்கள். உடனே ராமன் ஆசனத்திலிருந்து எழுந்து)

ராமன்: *என்ன இது கூச்சல்!*

பார்ப்பனர்-1 (பா.1) : *மகாப் பிரபு! அநியாயம் அக்ரமம்!*

பா.2: *தர்மம் அழிந்துவிட்டது பிரபு!*

பா.3:*எங்களுக்கெல்லாம் என்னமோ கஷ்டகாலம் பிடிச்சுண்டுடுத்து.*

ராமன்: *ராம ராஜ்யத்திலா பிராமணர்களுக்குக் கஷ்டம்!*

பா.1: *ஹே ராமா! இந்த அநீதியைப் பார்! என் குழந்தை அய்ந்து வயது பாலன் இறந்து பிணமாகக் கிடக்கிறானே, அய்யோ!*

ராமன்: *ஏன், யாராவது கொன்று விட்டார்களா?*

பா.1: *அய்யோ, அதெல்லாம் இல்லையே; ஒரு நாள் காய்ச்சல் -பாலன் போயிட்டானே!*

ராமன்: *என்ன செய்வது, விதி முடிந்துவிட்டது போலும்.*

பா.2: *என்ன! எங்களிடமுமா அதைச் சொல்லுகிறாய்? உன் ஆட்சியிலே எங்கோ அக்ரமம் நடக்கிறது. எந்தப் பாதகனோ தன் குலதர்மத்தை மீறி கொடுமை செய்கிறான்.*

ராமன்: *மந்திரி, நமது ராஜ்யத்தில் வர்ணாஸ்ரம முறைகளை மீறி எவனாவது ஏதாவது செய்கிறானா?*

மந்திரி: *இல்லை பிரபு! எல்லாம் ஒழுங்காவே நடைபெறுகிறது; மறை சொல்லும் வழிகளிலே - மறையவர்கள் மொழிகளிலே மக்கள் தவறாது ஒழுகுகிறார்கள். எவனாவது பிராமணீய தர்மத்தில் சிறிது தவறினாலும் அவன் தலை துண்டிக்கப்படுகிறது பிரபு!*

பா.1: *ஹே ராமா! உன் நாட்டில் இல்லாவிட்டாலும் இந்த உலகில் வேறு எங்கோ அநீதி நடைபெறவேண்டும். நம் முன்னோர்கள் வகுத்த சாஸ்திர சம்பிரதாய சட்ட திட்டங்கள் எங்கோ மீறப்படுகிறது.*

பா.2: *ராமா! உன் ஆட்சிக் காலத்தில் நாட்டில் என்னென்னவெல்லாம் நடை பெற்றிருக்கிறது! நீ போர்களில் ஈடுபட்டபோது, லீலா விநோதங்களில் அய்க்கியமாகி இருந்தபோது இந்த நாட்டிலே எவ்வளவு பஞ்சம் -பசி, பட்டினி, கொடுமைகள், சாவுகள் ஏற்பட்டன. இவ்வளவுக்கும் எந்த அக்ரஹாரத்திலேனும், ஒரு சிசுவாவது செத்ததுண்டா! உண்டா சொல்? இப்போது எப்படி இந்தப் பாலன் சாகலாம்? ஆகவே இப்போது என்னமோ கொடுமை நடக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.*

ராமன்: *(வசிஷ்டரிடம்) மகரிஷே! எனக்கு ஒன்றுமே புரியவில்லை! எங்காவது தர்மம் மீறப்படுகிறதா?*

வசிஷ்டர் : *இல்லை ராமா!... ஆனால், ராமா! தண்டகாரண்யத்தில் 'சம்பூகன்'' என்ற சூத்திர அரசன் கடவுளைக் காணுவதற்காகத் தவம் செய்து கொண்டிருக்கிறான்...*

பா.1: *பார்த்தேளா பிரபு! அய்யோ சூத்திரன் தவம் செய்கிறானாமே! என்ன கொடுமை!*

ராமன் : *மகரிஷே! கடவுளைக் காண ஒருவன் தவம் செய்வது தவறா?*

வசி: *‘தபஸ்’ பிராமணர்களுக்கு மட்டுமல்லவா? அதுதானே தர்மம்?*

பா.1: *சூத்திரன் வாயினால் நமது தூய கிரந்தங்கள் வெளிவரலாமா? ஹே ராஜன்! உன் ஆட்சியிலே பிராமணாளுக்கு இப்படி ஆபத்து வந்துட்டுதே. நீ இன்னும் பார்த்துண்டிருக்கியே?*

பா.2: *பிரபு! சூத்திரர்கள் நமது வேத வாசகங்களைக் காதுகளிலே கேட்டாலே பாபமென்றும், பழுக்கக் காச்சிய ஈயத்தை அந்தப் பாவாத்மாக்களின் காதுகளிலே ஊற்ற வேண்டுமென்றும் நமது ஸ்மிருதிகள் முறையிடுகின்றனவே.*

பா.1: *சூத்திரர்கள் வேத சாஸ்திரங்களைக் கற்றால் அவர்கள் நாக்குகளைத் துண்டிக்க வேண்டும் என்று நமது மறைகள் அறைகின்றனவே பிரபு! இந்தப் பாவி இரண்டையுமே மீறித் தவமே செய்கிறானாமே! அய்யோ!*

ராமன்: *மகரிஷே! சூத்திரர்கள் தவம் செய்தால் அவர்களுக்கு என்ன தண்டனை அளிக்க வேண்டுமென்று நமது சாஸ்திரங்கள் சொல்கின்றன?*

வசி: *நமது ராமராஜ்ய அரசியல் சட்ட ஏடுகளைக் கொண்டு வாருங்கள்.*

(ஏழெட்டுப் பேர் ஒரு பெரிய ஏட்டுச்சுவடியைத் தூக்கி வருகின்றனர்; அதைப் படித்துவிட்டு)

வசி: *தண்டனை; மரண தண்டனைதான்!*

பா.1: *ஆம் ராமா! தூக்கு கோதண்டத்தை; துண்டித்துத்தள்ளு அவன் தலையை!*

ராமன்: *அந்தச் சூத்திரனைக் கொன்று விட்டால் இந்தப் பிராமணக் குழந்தை பிழைத்து விடுமா?*

பா.1: *தாராளமாக!*

பா.2: *சூத்திரன் அழிந்துவிட்டால் பிராமணாளுக்குத் தொல்லையேது பிரபு? உடனே புறப்படுங்கள்;*

(எல்லோரும் புறப்பட்டுப் போகிறார்கள்)

காட்சி –25

இடம்:காடு; பாத்திரங்கள் : சம்பூகன், ராமன், மூன்று பார்ப்பனர்கள்.

(சடாமுடிதாரியாய் சர்வேஸ்வரனை நினைத்துத் தவத்திலீடுபட்டிருக்கிறான் சம்பூகன்)

சம்பூ: *'சிவாயநம' என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமணுகாது. 'ஓம் நமசிவாய...'' ஓம் நமசிவாய' 'ஓம் நமசிவாய...'*

பா.: *பிரபு! பார்த்தேளா அதோ சூத்திரன் தபஸ் பண்றதை?*

(இப்போது ராம லட்சுமணர்களும் பார்ப்பனர்களும் அங்கு வருகிறார்கள்; அவர்களைக் கண்ட சம்பூகன் எழுந்து)

சம்பூ: *அய்யன்மீர்! தாங்கள் யாரோ இங்கு வரக் காரணம்?*

லட்சு: *இவர் ஸ்ரீமந் ராமச்சந்திரமூர்த்தி - அயோத்தி சக்ரவர்த்தி!*

சம்பூ: *அப்படியா? பாக்யம்! பாக்யம்! பிரபு, எளியேன் சம்பூகன் தங்கட்கு அதிதி சத்காரம் செய்யக் காத்திருக்கிறேன்; ஏற்றருள வேண்டும்!*

ராமன்: *உன்னிடம் அதிதியாக இங்கு யாரும் வரவில்லை. போர் புரிய வந்திருக்கிறோம்... போர்...!*

சம்பூ: *போரா! புரியவில்லையே பிரபு!*

பா.1: *பார்த்தேளா எவ்வளவு திமிரா பேசறான்னு!*

சம்பூ: *பிரபு! எளியேன் என்ன பாபம் செய்தேன்?*

ராமன்: *நீ செய்யும் பாபக்ருத்யம் உனக்கே புரியவில்லையா?*

பா.2: *தபஸ் செய்கிறாயேடா தறுதலை? நீ சூத்திரப்பயல், தபஸ் செய்யலாமோ?*

சம்பூ: *உம்; காம, குரோத, மோக, லோப, மத, மாச்சரியங்களை விட்டுப் பரம் பொருளைக் காண முயலுவது பாபமா?*

ராமன்: *நீ சூத்திரன்; உன் குலத்தொழிலை விட்டுவிட்டாய். இந்நாட்டுச் சட்டப்படி அது கொடிய குற்றம், பாவம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறாயா?*

சம்பூ: *சட்டம் ! யார்....யாருக்காக எழுதி வைத்துக் கொண்டது பிரபு? பார்ப்பானையும் சூத்திரனையும் படைப்பிலேயே ஆண்டவன் உண்டாக்குகிறானா? இயற்கையின் சிருஷ்டிகளாகிய மிருகங்களைப் பாருங்கள்! நாயை எவ்வளவுதான் மாற்றினாலும் சிங்கமாக்க முடியுமா? புலியை ஆடாக மாற்ற முடியுமா? மாறுபட்ட அங்க அமைப்புகள் இயற்கைக் கூறுகள். ஆனால், மனிதர்களை வருண பேதங்காட்டி வஞ்சகர்கள் பிரித்துள்ளார்களே; பார்ப்பானுக்கும் சூத்திரனுக்கும், புலிக்கும் ஆட்டுக்கும் உள்ளதைப் போல - சிங்கத்திற்கும் சிறு நாய்க்கும் உள்ளதைப் போல ஏதேனும் அங்க மாறுபாடுகள், இயற்கை வேறுபாடுகள் இருக்கின்றதா?*

பிரபு, அது கடவுள் செயல்! இது கயவர்கள் செயல்! தாங்கள் எதை ஒப்புக் கொள்ளுகிறீர்கள்? ஒரு கொலைகாரன், குடியன், மடையன் பார்ப்பனத்தி என்பவளின் வயிற்றிலே பிறந்துவிட்டதனால் மாத்திரம் பிராமணனாகி விட முடியுமா? ஒரு அறிஞன், உத்தமன், உயர் பண்பாளன் - சூத்திரச்சி என்று சொல்பவளின் வயிற்றிலே பிறந்து விட்டதனால் மட்டும் சூத்திரனாகிவிட முடியுமா? எல்லோரும் மனிதர்களாகவே பிறக்கிறோம். அவனவன் செய்கையால் உயர்வும் தாழ்வும் உண்டாகிறது - உண்டாக வேண்டும். இதுதானே இயற்கையின் கட்டளை; ஆண்டவன் வகுத்த சட்டம்! இதை விட்டு அயோக்கியர்கள் தங்கள் நலனுக்காக, ஆண்டவன் கட்டளைக்கே எதிராக எழுதி வைத்திருக்கும் நூல்களும் வேதங்களும் எப்படி சட்டமாக இருக்க முடியும்?

ராமன்: *சூத்ரா! வாதம் பேசி உன் அபவாதத்தை மறைக்க முயலாதே ! நீ சொல்வதிலே எவ்வளவுதான் உண்மை இருந்தபோதிலும், இப்போது அமுலிலுள்ள சட்டங்களை நீ மதிக்கவில்லை; மீறி இருக்கிறாய். அதற்கான தண்டனையை நீ அடைந்தே ஆக வேண்டும்!*

சம்பூ: *என்னைச் சூத்திரன் என்று யார் சொல்வது? தத்வ, வேத, உபநிஷத, வியாகர்ண, புராண, இதிகாச, சாஸ்திர சம்பரதாயங்களிலே என்னோடு யார் வேண்டுமானாலும் சர்ச்சை செய்து கொள்ளலாம்!*

ராமன்: *அது வீண்வேலை. நீ சூத்திரன் என்று நாங்கள் சொல்கிறோம். இதோ, இந்த மறையவர்கள் தீர்மானிக்கிறார்கள் - சொல்லுகிறார்கள்! நீ வர்ண தர்மத்தை மீறிய காரியத்திலீடுபட்டதினால்தான், இவர்களது குழந்தை இறந்துவிட்டதாம்; அதனால் உன்னை எப்படியும் கொன்றே ஆகவேண்டும் - சட்டப்படி!*

சம்பூ: *நீதிக்கு உங்கள் ராஜ்யத்தில் இடமே இல்லை போலும்?*

ராமன்: *நீதி, அநீதியை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு உன்னுடைய தல்ல (பார்ப்பனர்களைக் காட்டி) இவர்களுடையது!*

சம்பூ: *வஞ்சக நரிகளும், செத்த பின்பும் கொத்தும் கழுகுகளும் வாழ்கின்ற நாட்டிலே இருப்பதைவிட, எதிர்த்துத்தாக்கும் புலிகளும், பிணங்களைத் தீண்டா சிங்கங்களும் வாழும் காட்டைத் தேர்ந்தெடுத்தேன். இங்கும் உங்கள் சட்டங்கள் என்னை விடவில்லையே! பிரபு! என் உயிர் வேண்டுமென்று கேட்டால் நானே கொடுப்பேனே! இதற்கு ஏன் குற்றச்சாட்டு, சட்டப்பிரயோகம் என்கிற நாடகமெல்லாம்?*

ராமன்: *ராமராஜ்யத்தில் எதுவுமே சட்டத்தின் பெயரால்தான் செய்யப்படும்.*

சம்பூ: *அப்படியானால் இந்தப் பார்ப்பனர்களுக்கு ஆகாதவர்கள் அத்தனை பேரையும் குறிப்பிட்ட ஒரு நாளில் கொன்றுவிட ஒரு அவசரச் சட்டமே போட்டு விடுங்களேன்...*

ராமன்: *அவசியமானால் அதையும் செய்யத்தான் போகிறோம்!*

சம்பூ: *ஆனால், உங்கள் சட்டங்களும் ராஜ்யமும் அஸ்திவாரமில்லாத கட்டடம் என்பதை மறந்து விடாதீர்கள்.*

தொடர்ச்சி 4-ம் பக்கத்தில்

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

ஞானேஷ்குமார் பதவி விலகக் கோரி ஆர்ப்பாட்டம்!

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி, அக்-16, காலை 10 மணிக்கு, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இடதுசாரிகள் ஒருங்கிணைத்த இந்நிகழ்வில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்.பி, திமுக சட்டமன்ற உறுப்பினர் சேகர்பாபு, திமுக முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் உள்ளிட்ட பலரும் கண்டன உரையாற்றினர்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், பகுதி அமைப்பாளர் சேத்துப்பட்டு ராஜன், தோழர்கள் மயிலை மனோகர், தினகரன், சிகாமணி, செல்வகுமாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னை, கோவை, திருப்பூர், கடலூரில் ஆயுத பூஜை நிறுத்தக் கோரிக்கை மனு!

சென்னை: அரசு அலுவலகங்களில் (காவல் நிலையங்கள் உட்பட), ஆயுத பூஜை போன்ற மத நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எதிராக, அரசாணையும் நீதிமன்றத் தீர்ப்புகளும் இருக்கும் நிலையில், அதை மதிக்காமல் செயல்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அக்-15 அன்று காலை 11 மணிக்கு, சென்னை காவல் ஆணையரிடம், சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், தோழர்கள் ஏசு குமார், நாகராஜ் ஆகியோர் கோரிக்கை மனு அளித்தனர்.

கடலூர்: அக்-15 இரவு 7 மணி அளவில் கடலூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தர் சுக்லா அவர்களைச் சந்தித்து அரசு அலுவலகங்களிலும், அரசுப் பள்ளிகளிலும் மதச்சார்பற்ற தன்மைக்கு எதிராகவும் அரசு ஆணைகள், நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராகவும் ஆயுத பூஜை நடைபெறுவதை தடுத்து நிறுத்தக் கோரி கடலூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக கழகப் பொறுப்பாளர் பெரியார் சிவா மனு அளித்தார்.

கோவை: அக்-14 அன்று காலை கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மதச்சார்பற்ற அரசு அலுவலகங்களில் மதம் சார்ந்த பண்டிகைகள், வழிபாடுகள் நடத்தக்கூடாது என்கிற அரசின் ஆணைகளைப் பின்பற்ற வலியுறுத்தி கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

திருப்பூர்: அக்-19 திங்கள் அன்று "ஆயுத பூஜை" எனும் பெயரில் அரசு அலுவலகங்களான காவல் நிலையங்கள், அரசுப் பள்ளிக் கூடங்கள் என அனைத்து இடங்களிலும் குறிப்பிட்ட ஒரு மத நம்பிக்கை சார்ந்த நிகழ்வுகளைத் தடுக்கக் கோரியும், இந்திய அரசியல் சட்ட சாசனம் கூறும் மதச்சார்பற்ற தன்மைக்கு எதிராகவும் அரசு ஆணைகள், நீதிமன்ற உத்தரவுகளுக்கு எதிராகவும் நடைபெறும் ஆயுத பூஜை நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என திருப்பூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக

மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையாளர், காவல் கண்காணிப்பாளர், மாநகராட்சி ஆணையாளர் ஆகியோரிடம் மாவட்டத்தலைவர் முகில்ராசு தலைமையில் மனு வழங்கப்பட்டது. மாநகரச் செயலாளர் மாதவன், தெற்கு பகுதிச் செயலாளர் ராமசாமி, மாநகர அமைப்பாளர் முத்து, தமிழமுதன் (மார்க்சிய திராவிடப் பேரவை), தோழர்கள் இனியன், குணா, ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர்.

திருப்பூரில் 'மார்க்சிய திராவிடர் பேரவை' தொடக்கம்

தந்தை பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர்-17 அன்று திருப்பூர் தமிழ் அமுதன் புதிய இயக்கம் கண்டார். தமிழ் அமுதன் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக புரட்சிகர இளைஞர் முன்னணியில் செயல்பட்டு வந்தவர். சில முரண்கள் காரணமாக தன்னை அங்கிருந்து விடுவித்துக் கொண்டு முற்போக்கு அமைப்புகளின் நிகழ்வுகளில் கலந்து கொண்டு மக்கள் பணியைத் தொடர்ந்தார். மேலும் மக்கள் பணியைத் தொடர தனக்கென ஒரு அமைப்பு வேண்டும் என்று சிந்தித்த தமிழ் அமுதன் மார்க்சிய திராவிடர் பேரவை என்ற இயக்கத்தைத் தொடங்கி உள்ளார். இயக்கத்தின் கொள்கையாக ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தமிழ் மொழிப் பாதுகாப்பு (இந்தி எதிர்ப்பு), சனாதன எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு ஆகிய தளங்களில் பெரியாரிய அமைப்புகளோடு இணைந்து எமது அமைப்பு செயல்படும் என்பதை உறுதிபடக் கூறினார். இயக்கத்தின் கொடி அறிமுக நிகழ்வு அம்மாபாளையம் பெரியார் படிப்பகத்தில் மாலை 5 மணி அளவில் நடைபெற்றது

கொடியை அறிமுகப்படுத்தி கழகப் பொருளாளர், துரைசாமி, முகில் ராசு மாவட்டத் தலைவர், ஆறுச்சாமி மாவட்டத் தலைவர், தி.க, சண். முத்துக்குமார், மாவட்டத் தலைவர், தபெதிக, பாரதி சுப்பராயன், தலைவர்-நவீன மனிதர்கள் இயக்கம், எஸ்.ஏ. காதர் எழுத்தாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வில் மாரிமுத்து மாநகர துணைத் தலைவர், அருண் அமைப்புச் செயலாளர்-நவீன மனிதர்கள் இயக்கம், கழகத் தோழர்கள் இரவி, குணா, இனியன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

மேட்டுப்பாளையத்தில் கழகப் பரப்புரை!

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பெரியாரின் 148 வது பிறந்த நாள் விழா தெருமுனைக் கூட்டம் அக்-10 மாலை 4.30 மணி அளவில் அன்னூர் கஞ்சப்பள்ளி பிரிவு பேருந்து நிறுத்தத்தில் விஷ்ணு தலைமையிலும், மாலை 6 மணி அளவில் அபிராமி தியேட்டர் முன்பு தென்றல் இராமச்சந்திரன் தலைமையிலும், நகரச் செயலாளர் அமுல்ராஜ் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது. கூட்டத்தில் யாழினி கிருஷ்ணன் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர்.

பரிமளராஜன் (முகநூல் பொறுப்பாளர்), இக்பால் (மதிமுக), சந்திரசேகர் (தபெதிக), இரவிச்சந்திரன் (கலைஞர் பேரவை), வேலுச்சாமி (திக), அமைதி (இராமச்சந்திரன் அவர்களின் பேத்தி), பத்மநாபன் (ஜாஒவிமு), நிர்மல்குமார் (மாநகரச் செயலாளர்) ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். சூலூர் பன்னீர்செல்வம் நன்றியுரையாற்றினார்.

தோழமை அமைப்பினர் ரங்கராஜ் பக, ஆதரவாளர் பைசல், தமிழ்ப் புலிகள் கட்சித் தோழர்கள், இராமச்சந்திரன் அய்யா குடும்பத்தினர் அறிவுக்கொடி, இந்திரஜித் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்கள் சூலூர்.பன்னீர்செல்வம், முகில்ராசு, யாழினி, கிருஷ்ணன் ஆகியோர் கடைகளில் துண்டறிக்கை வழங்கி நன்கொடை வசூலித்தனர்.

3-ம் பக்க தொடர்ச்சி..

ராமன்: *ஓஹோ! எங்கள் ராஜ்யத்தைக் கைப்பற்ற உன் கூட்டத்திற்கு ஆணவமிருந்தால் படையோடு வாயேன் இப்போதே போரிட்டு விடலாம். அதோ பார்த்தாயா என் படைகள் அணிவகுத்து நிற்பதை!*

சம்பூ: *உம்; என் கேள்விகளுக்கு விடை கூற முடியாவிட்டாலும் படையைக் காட்டிப் பயங்காட்டுகிறீர்களே, அது ஒன்றே போதும் உங்கள் செய்கைகளின் நேர்மையை விளக்க....*

ராமன்: *சூத்திரா, அதிகம் பேசாதே! அவசியமானால் ஆயுதம் தரித்துவா, நாம் இருவருமே போரிட்டு விடலாம்.*

சம்பூ: *கேவலம், உங்களோடு போரிட நான் ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் உங்கள் இதயத்திலே நீதிக்கு, அன்புக்கு, அறத்துக்குக் கொஞ்சமேனும் மதிப்பு இருந்தால் அவற்றோடு போராடுங்கள்! உங்கள் ராமராஜ்யத்தின் லட்சணத்தை, நீதியின் பெருமையை உலகமெல்லாம் அறிந்துகொள்ள இதோ சம்பூகனின் தலை நிராயுத பாணியாக நிற்கும் ஒரு நேர்மையாளனின் தலை - கடவுள் மீது அன்பு கொண்ட ஒரு பக்தனின் தலை காணிக்கையாக வைத்துள்ளேன். உம், வெட்டிக் கொள்ளுங்கள்!*

(ராமன் சம்பூகனின் தலையை தனது கையிலுள்ள கொடுவாளால் ஒரே வெட்டாக வெட்டிச் சாய்க்கிறான்... ரத்தம் பீறிட்டு ஓடுகிறது...தலை ஓர் புறம் விழ உடல் துடித்து அடங்குகிறது)

(இப்போது காட்டில் உள்ள இதர மகரிஷிகளும் முனிவர்களும் ராமன் அருகில் வந்து)

ரிஷி-1: *ராமா நீ நீடு வாழனும்! தர்ம விரோதியும் பாவ ஆத்துமாவும் ஆன இந்த சூத்ரனைக் கொன்று வேததர்மத்தை உத்தாரணம் பண்ணிய உன்னை எப்படிப் பாராட்டுவது என்றே எங்களுக்குப் புரியலே!*

ராமன்: *மகரிஷிகளே! என்னைப் பாராட்டுவது பிறகு இருக்கட்டும். நான் செய்த இந்தக் காரியம் தர்மம் சம்பந்தமானது என்று நீங்கள் கருதினால் இறந்து போன பிராமணக் குழந்தைக்கு உடனே உயிரைக் கொடுத்து அருளுங்கள்.....!*

ரிஷி-2. *ராமா உனக்கு அந்தக் கவலையே வேண்டாம்! தர்ம நிந்தகனாகிய சம்பூகனுடைய தலை கீழே விழுந்த மறுகணமே இந்தக் குழந்தைக்கு உயிர் வந்து விட்டது! இதோ பார்!*

(இப்போது பார்ப்பனச் சிறுவன் துள்ளி எழுகிறான்)

பா.1: *பார்த்தேளா பிரபு! என் குழந்தை உடனே பிழைச்சுண்டான்! வாடா என் குழந்தே.*

ராமன்: *கட்டிப் பிடித்துத் தூக்கிக் கொள்கிறான், குழந்தை அவலட்சணமாக இருப்பதைப் பார்த்து, ஏளனமாக ஆகா, என்ன அழகான குழந்தை.*

பா.2: *இதிலேர்ந்தே, இந்தக் காரியம் பகவானுக்குப் பிரீதியானது, அப்படீன்னு தெரியுதில்லே?*

ராமன்: *ஆகா! அதிலென்ன சந்தேகம்!*

காட்சி -25 (அ)

(இடம்: காட்டில் ஒரு பகுதி,பாத்திரங்கள் : பார்ப்பனர்களும், பையனும்)

பா.1: *அடே சேஷு! நீ அப்படியே செத்துப்போன மாதிரியே மூச்சடக்கிண்டு இருந்தியேடா! என்ன சமர்த்து! என்ன சமர்த்து!*

பா.2: *ஓய்!அந்தச் சூத்திரன் தலை கீழே விழுந்ததும் பையன் துள்ளி எழுந்ததும் சரியா இருக்கவே, ஸ்ரீராமனே ஆச்சரியப்பட்டுட்டார் -இல்லியாங்காணும்? இனிமே எந்தச் சூத்திரப்பயலும் நம்ப வழிக்கே வரமாட்டான்.*

பா.3: *நாம் இப்படி ஏதாவது அற்புதங்கள் செய்துண்டே இருந்தாதாங் காணும் அரசனும் பயப்படுவன், சூத்திரப் பசங்களும் நமக்கு இடஞ்சல் செய்யமாட்டா. நமது வேதங்கள் இதைத்தானேங்காணும் சொல்றது?*

பா.1: *ஆகா! அதிலென்ன சந்தேகம்!*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : October 22, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran